**No. A. 34012/15/2024/DP&AR(Exam)**
**GOVERNMENT OF PUDUCHERRY**
**DEPARTMENT OF PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS**
**(PERSONNEL WING)**
****

Puducherry, dated 08.02.2025

# PRESS RELEASE

The Common Written Competitive Examination for recruitment to the post of **Fireman** and **Fireman Driver Grade-III** in Fire Service Department, Puducherry is scheduled to be held on 09.02.2025 (Sunday) at 5 centres in Puducherry Region.

The Exam will be held in the morning from 10.00 A.M to 12.00 Noon. 2093 candidates are eligible to appear for the examination.

The candidates shall be permitted to appear in the examination only at the venue specified in the Hall Ticket. They will not be allowed to appear for the examination in any other centre. They shall bring the Hall Ticket duly affixing their passport size photo in the space prescribed for it and duly signed it. They shall also bring any one of the valid original I.D proof like Aadhar/Voter ID/ Driving licence/Passport/PAN etc. along with the Hall Ticket.

**Candidate will be allowed in the examination venue after taking bio-metric attendance. The candidate should reach the examination venue well in advance for the above said purpose.**

**The main gate of the examination venue will be closed half an hour before the conduct of examination i.e. at 9.30 a.m. No entry of candidates will be allowed after the closing time of gate. Candidates are advised to reach the venue well in advance.**

The candidates are allowed to bring Hall Ticket, Original I.D. Proof and Black Ball Point Pen only. They are prohibited from bringing handbag, mobile phones, smart watches, bluetooth devices, head phones, calculator, storage devices etc. to the Examination Centre.

Arrangements for Jamming of mobile/internet services and CCTV surveillance in all exam rooms/halls have been made.

...2/-

**Those who have not yet downloaded the Hall Ticket are advised to download the Hall Ticket from the Official website "https"//recruitment.py.gov.in" immediately. They are also advised to familiarize themselves with the location of the Examination Centre well in advance.**

The candidates are also advised to go through the instructions and other details printed on their Hall Ticket carefully and comply with the same. Strict legal action will be taken, including lodging of FIR & debarment from future examinations, if candidates are found using any type of unfair means during examination.

The Government is committed to ensuring fair, transparent & merit-based examination process.

For any clarification/assistance, candidates may contact in the telephone number 0413-2233338 during the Office hours until 08.02.2025.

07/02/2025

**Pankaj Kumar Jha, I.A.S**
**Secretary to Govt-cum Controller of Exam**

**புதுச்சேரி அரசு**
**பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை**
**(பணியாளர் சிறகம்)**
***

எண்: A.34012/15/2024/DP&AR(Exam) புதுச்சேரி, தேதி: 08.02.2025

## <u>செய்திக் குறிப்பு</u>

புதுச்சேரி, தீயணைப்புத் துறையில் தீயணைப்பாளர் மற்றும் தீயணைப்பு வாகன ஓட்டுனர் நிலை – III பணியிடத்திற்கான தேர்வு 09.02.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று புதுச்சேரியில் 5 தேர்வு மையங்களில் நடைபெற இருக்கின்றது.

இத்தேர்வானது காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெறுகின்றது. 2093 தேர்வர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

விண்ணப்பதாரர்கள் நுழைவுச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். வேறு மையங்களில் தேர்வு எழுத முடியாது. நுழைவுச் சீட்டில் அவர்களது பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை உரிய இடத்தில் ஒட்டி கையொப்பம் இட்டு எடுத்து வரவேண்டும். மேலும் விண்ணப்பதாரர்கள் நுழைவுச் சீட்டுடன் ஆதார் / வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட் / வருமான வரி பான் கார்டு இவற்றுள் ஏதாவது ஒன்றின் அசலை (Original) கட்டாயம் கொண்டு வரவேண்டும்.

தேர்வர்களின் விரல்ரேகை பதிவு செய்யப்பட்ட பின்னரே தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படுவர். எனவே தேர்வர்கள் உரிய நேரத்திற்கு முன்னரே தேர்வு மையத்திற்கு வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**தேர்வு மையத்தின் நுழைவு வாயில் சரியாக காலை 9.30 மணிக்கு மூடப்படும். அதற்கு பின்னர் வரும் தேர்வர்கள் தேர்வு மையத்தில் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே தேர்வர்கள் தேர்வு நடைபெறும் இடத்திற்கு முன்னதாக வருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

தேர்வர்கள் கருப்பு வண்ண பால் பாய்ண்ட் பேனா, நுழைவுச் சீட்டு மற்றும் அசல் அடையாள அட்டை மட்டுமே தேர்வு மையத்திற்குக் கொண்டு வரவேண்டும். கைப்பைகள் /செல்போன்கள்/புளூ டூத் சாதனங்கள்/ ஹெட் போன்கள் / கால்குலேட்டர்கள் / பென் டிரைவ் போன்ற இதர எலக்ட்ரானிக் சாதனங்களை கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது.

..2/-

மொபைல்/இன்டர்நெட் சேவைகளை தடுப்பதற்கான ஜாமர் கருவிகளும், அனைத்துத் தேர்வு அறைகளிலும் கண்காணிப்பு காமிராக்களும் (CCTV) பொருத்தப்படும்.

இதுவரை நுழைவுச் சீட்டை பதிவிறக்கம் செய்யாதவர்கள் உடனடியாக நுழைவுச் சீட்டை https://recruitment.py.gov.in என்னும் அதிகாரபூர்வ இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப் படுகிறார்கள். விண்ணப்பதாரர்கள் தங்களது தேர்வு மையங்களின் இருப்பிடங்களை முன்னரே அறிந்து கொண்டு தேர்வு மையங்களுக்கு சரியான நேரத்திற்கு சென்றடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தேர்வர்கள் தங்கள் நுழைவுச் சீட்டில் அச்சிடப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்கள் மற்றும் பிற விவரங்களை கவனமாகப் பார்த்து, அதை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தேர்வின் போது எந்த விதமான முறையற்ற வழிகளைப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால், எப்ஐஆர் பதிவு செய்தல் மற்றும் எதிர்காலத் தேர்வுகளில் இருந்து தடை உட்பட கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்வை வெளிப்படை தன்மையுடன் நேர்மையாக நடத்த அரசு உறுதியாக உள்ளது.

இது தொடர்பாக மேலும் விவரங்கள் (அ) உதவி தேவைப்பட்டால், தேர்வர்கள் அலுவலக நேரத்தில் 0413-2233338 என்ற தொலைபேசி எண்ணில் 08.02.2025 வரை தொடர்பு கொள்ளலாம்.

**பங்கஜ் குமார் ஜா, இ.ஆ.ப**
**தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி**